செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 23.02.2016

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) : ஜனவரி 2016

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 ஜனவரிக்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 ஜனவரிக்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 112.0 என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (டிசம்பர்) சுட்டெண்ணான 113.2 உடன் ஒப்பிடுகையில் 1.2 சுட்டெண் புள்ளி மற்றும் 1.1 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் 1.03% மற்றும் உணவல்லாப் பொருட்களின் 0.02% பெறுமதி வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும்.

2016 ஜனவரியில், கடந்த மாதம் (டிசம்பர்) உடன் ஒப்பிடும்போது மரக்கறி, பச்சை மிளகாய், பெரிய வெங்காயம், தேசிக்காய், உருளைக்கிழங்கு, தேங்காய், அரிசி, சின்ன வெங்காயம், பால்மா என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே உணவுப் பொருட்களின் பெறுமதி வீழ்ச்சிக்குக் காரணமாகும். எனினும் உடன் மீன், கருவாடு, சீனி, முட்டை, மைசூர் பருப்பு, மாம்பழம், வாழைப்பழம், தேங்காய் எண்ணெய், மிளகாய்த்தூள் என்பவற்றின் விலைகளில் கடந்த மாதத்துடன் (டிசம்பர்) ஒப்பிடும்போது அதிகரிப்புக் காணப்படுகிறது.

டிசம்பர் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 ஜனவரிக்கான உணவல்லாப் பொருட்களின் பெறுமதி, 0.02% வீழ்ச்சியினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் ‘போக்குவரத்து’ இனால் ஏற்பட்டதாகும். கடந்த மாதத்துடன் (டிசம்பர்) ஒப்பிடும்போது 2016 ஜனவரியில் விமானக் கட்டணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக போக்குவரத்துப் பிரிவில் வீழ்ச்சி ஏற்பட்டது. ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து’ மற்றும் ‘உடையும் காலணியும்’ பிரிவில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்படுகிறது.

தே.நு.வி.சு. வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. ஏ.ஜே.சத்தரசிங்ஹ அவர்கள், 2016 ஜனவரிக்கான தே.நு.வி.சு. அடிப்படையில் வருடத்திற்கு வருடம் கணிக்கப்பட்ட பணவீக்கம் -0.7% ஆகவும் டிசம்பர் 2015 இற்கான பணவீக்கம் 4.2% ஆக இருந்ததெனவும் தெரிவித்தார். 2015 ஜனவரிக்கான சந்தைக் கூடைப் பெறுமதி (ரூபா 36,272.14) ஒப்பீட்டளவில் 2016 ஜனவரிக்கான சந்தைக் கூடைப் பெறுமதியை விட உயர்வாக இருப்பது (ரூபா 35,997.76). 2016 ஜனவரியில் மதிப்பிறக்கத்தைக் காட்டுகிறது.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அண்மைய நுகர்வோர் விலைச் சுட்டெண் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாகும். 2015 ஒக்டோபரில் இருந்து தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்(அடிப்படை2013=100) இனை மாதாந்தம் 21 நாட்கள் இடைவெளியில் வெளியிடுகிறது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தொ.இல : 011-2147001 / 011-2147020